# நாகை மாவட்டத்தில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி - விருது - நல உதவிகள்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!
























முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, நாகை மாவட்டத்தைச் சேர்ந்த கழகத்தின் 700 மூத்த முன்னோடிகளுக்கு தலா ரூ.10,000 பொற்கிழி – விருது மற்றும் நாகை மாவட்ட தி.மு.க. அலுவலக கட்டுமானப் பணி துவக்குதல், பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்குதல், விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு காப்பீடு மற்றும் சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். இதில் அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள் – முன்னாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.





நாகை மாவட்டத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நேற்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்தபோது, சாலையெங்கும் கழகத்தினர், மகளிர், மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் திரண்டு வரவேற்பளித்த காட்சி.